# தினசரி தொற்றுத்தடுப்பு தனிப்படுத்தல் பரிசோதனைத் திட்டம்

பள்ளிக்கு வரும் மாணவர்களை முடிந்த அளவுக்கு ஆரோக்கியமாக வைத்திருக்க வேண்டும் என்ற இலக்கு நோக்கி நாங்கள் தொடர்ந்து செயல்படும் நேரத்தில், நெருக்கமான தொடர்புகளில் இருந்ததாக கண்டறியப்பட்டுள்ள அறிகுறிகளற்ற, தடுப்பூசி போட்டுக்கொள்ளாத மாணவர்களை அனுமதிக்கின்ற மிச்சிகன் சுகாதாரத் துறை திட்டத்தில் சேர்வதற்கான வாய்ப்பினை நாங்கள் பெற்றுள்ளோம். இந்தத் திட்டம் முற்றிலும் தன்னார்வமானது, ஆனால் இது பள்ளியில் தொற்றுப்பாதிப்பு சூழ்நிலைக்கு உள்ளாவதால் கற்க இயலாமல் போகும் நிலைமையைக் குறைப்பதற்கு அல்லது அகற்றுவதற்கு குடும்பங்களுக்கு மேலும் ஒரு வாய்ப்புக் கொடுக்கிறது.

**இந்தத் திட்டம் எவ்வாறு செயல்படுகிறது?**

- இது ஒரு இலவச தினசரி பரிசோதனைத் திட்டம் ஆகும். தொற்றுப்பாதிப்பு சூழ்நிலைக்கு உள்ளான தேதியிலிருந்து 7ஆம் நாள் வரை பள்ளி தொடங்குவதற்கு முன்பாக ஒவ்வொரு நாளும் பரிசோதனை மையத்திற்கு உங்கள் மாணவர் வர வேண்டும். உங்கள் மாணவர் ஏழு நாள்களுக்கும் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவார் என்பது இதன் அர்த்தம் அல்ல - பெரும்பாலான மாணவர்களுக்கு சில நாள்களுக்கு மட்டுமே பரிசோதனை மேற்கொள்ளப்படும், ஏனெனில் பெரும்பாலும் தொற்றுப்பாதிப்பு சூழ்நிலைக்கு உள்ளான பிறகு இரண்டு நாள்களிலேயே பாஸிட்டிவ் முடிவு பற்றி நாங்கள் கண்டறிந்துவிடுவோம்.

- நாள் 7 ஆனது வார இறுதியில் வருவதாக இருந்தால், திட்டத்தை முடிக்க மாணவர் அடுத்த திங்கள்கிழமை வர வேண்டியிருக்கும். இந்தப் பூர்வாங்கத் திட்டத்திற்கு, நாளை அல்லது வெள்ளிக்கிழமை நீங்கள் பரிசோதனை மையத்திற்கு வரும்போது ஒவ்வொரு மாணவருக்கும் பரிசோதனையின் கடைசி நாள் எது என்பதை நாங்கள் உறுதிப்படுத்துவோம். எதிர்காலத்தில் எப்போதாவது தொற்றுப்பாதிப்பு சூழ்நிலைக்கு உள்ளாகும் பட்சத்தில், தொற்றுப்பாதிப்பு சூழ்நிலை பற்றி மாணவர்களுக்குத் தகவல் தெரிவிக்கப்படும்போது இந்தத் தேதிகளை நீங்கள் பெறுவீர்கள்.

- **மாணவர்கள் பரிசோதிக்கப்பட்ட பிறகு ஒவ்வொரு நாளும், நீங்கள் ஒரு அனுமதிச்சீட்டு பெறுவீர்கள் மற்றும் அன்றைய தினம் உங்களால் பள்ளிக்குச் செல்ல முடியும். ஒவ்வொரு பள்ளிக்கான வருகை நேரங்களை**

**கீழே பார்க்கவும் - இதில் குறிப்பிடப்பட்ட நேரத்திற்கு முன்னதாக மாணவர்கள் வரக் கூடாது.**

- இது அறிகுறிகளைக் கொண்டிராத மாணவர்களுக்கு மட்டுமே. உங்கள் மாணவருக்கு ஏதாவது அறிகுறிகள் இருந்தால் அல்லது புதிதாக ஏற்பட்டால், அவர்கள் பரிசோதனை மையத்திற்கு வர முடியாது. உங்கள் மாணவர் அறிகுறிகளைக் கொண்டிருந்தால் கூடிய விரைவில் நீங்கள் PCR பரிசோதனை செய்துகொள்ள வேண்டும் என நாங்கள் அறிவுறுத்துகிறோம்.

- பங்கேற்க ஒரு பெற்றோர் அல்லது பாதுகாவலர் மாணவரை அழைத்து வர வேண்டும் மற்றும் ஒப்புதல் படிவத்தில் கையொப்பம் இட வேண்டும் *(இத்துடன் இணைக்கப்பட்டுள்ள படிவத்தை அச்சிட்டு அதை உங்களுடன் எடுத்து வர வேண்டும். உங்களிடம் பிரிண்டர் வசதி இல்லையென்றால் இந்த நகல்களை மையத்திலும் நாங்கள் வைத்திருக்கிறோம். இந்தப் படிவத்தில் ஒரு முறை மட்டுமே கையொப்பமிட வேண்டும்.)*

- இது ஒரு விரைவுப் பரிசோதனை ஆகும் (அதாவது இது முற்றிலுமாக நாசிக்குழிக்குள் செல்லாது). இது <u>சுயமாகப் பயன்படுத்தக்கூடியதாகும்</u>. இதன் பொருள் என்னவென்றால் - எங்கள் ஊழியர்களின் மேற்பார்வையில் - உங்கள் மாணவர் தானே சுயமாக ஸ்வாப் செய்துகொள்வார். இளவயது மாணவர்களின் பெற்றோர்கள் தங்கள் மாணவரின் நாசியில் ஸ்வாப் செய்வார்கள்.

**எனது மாணவர் தகுதியுடையவரா என்பதை நான் எப்படி தெரிந்துகொள்வது?**

- பள்ளியில் பாதிக்கப்படும் சூழ்நிலைக்கு ஆட்பட்டு தொற்றுத்தடுப்பு தனிப்படுத்தலில் இருக்கின்ற TSD மாணவர்கள் இந்த MDHHS திட்டத்திற்குத் தகுதியுடையவர்கள் ஆவர். துரதிருஷ்டவசமாக, பெற்றோர்கள், பிற உடன்பிறந்தவர்கள் அல்லது பயணக் குழுக்கள் அல்லது நடன வகுப்புகள் போன்ற TSD அல்லாத செயல்பாடுகளில் ஈடுபட்ட மாணவர்கள் ஆகியோருக்கு நாங்கள் பரிசோதனை மேற்கொள்ள முடியாது.

- மாணவருடன் வசிக்கின்ற குடும்பத் தொடர்புகள் (பரிசோதனை முடிவு கோவிட் பாஸிட்டிவ் எனப் பெற்றுள்ள உடன்பிறந்தவர்கள் அல்லது பெற்றோருடன் வசிக்கும் மாணவர்கள்) 10-நாள்கள் தொற்றுத்தடுப்பு தனிப்படுத்தலில் இருப்பார்கள், ஆனால் அவர்கள் 11-ஆம் நாளில் இருந்து பரிசோதனைத் திட்டத்தைத் தொடங்குவதற்கான தகுதி பெறுவார்கள், இது தற்போது நடைமுறையில் உள்ள 20-நாள்கள் தொற்றுத்தடுப்பு தனிப்படுத்தல் காலத்தை பாதியாகக் குறைக்கும். இந்தச் சூழ்நிலை உங்களுக்குப் பொருந்தக்கூடியதாக

இருந்தால் மற்றும் நீங்கள் இதைப் பெறுபவராக இருந்தால், உங்கள் மாணவர் நாளை பரிசோதனை மையத்திற்கு வருவதற்கான தகுதியைப் பெறுவார்.

**உள்ளூர் மருந்தகத்தில் அல்லது மருத்துவமனையில் நான் தனியாக பரிசோதனை செய்துகொள்ளலாமா? வீட்டிற்கு வரவழைத்து பரிசோதனை செய்துகொள்ளலாமா?**

- இந்த நேரத்தில், எங்கள் தினசரி பரிசோதனைத் திட்டத்திற்கு நீங்கள் எங்கள் பரிசோதனை மையத்திற்கு வர வேண்டும், அப்போது தான் உங்கள் முடிவுகளை உங்கள் மாணவரின் பள்ளிக்கு நாங்கள் துல்லியமாகத் தெரிவிக்க முடியும். திட்டத்திற்கான MDHHS விதிகளின்படி நாங்கள் அவர்களுடைய வழிகாட்டுதல்களைப் பின்பற்ற வேண்டும் மற்றும் பாஸிட்டிவ் முடிவுகளை நான்கு மணிநேரத்திற்குள் தெரியப்படுத்த வேண்டும். அதோடு, மாணவர் பள்ளிக்கு வர விரும்பும் அதே நாளில் பரிசோதனை செய்யப்பட வேண்டும் மற்றும் மிகக் குறைவான வெளிப்புற சோதனை மையங்கள் மட்டுமே அதிகாலை நேரங்களில் திறந்திருக்கின்றன. வீட்டிலோ அல்லது வெளியிடங்களிலோ செய்யப்படும் பரிசோதனை முடிவுகளை எங்களால் சரிபார்க்க முடியாது.

**தொற்றுத்தடுப்பு தனிப்படுத்தலில் உள்ள எனது மாணவருக்கு இதைச் செய்ய நான் ஆர்வமாக இருக்கிறேன்! நான் எப்போது, எங்கே வர வேண்டும்?**

- நியமனச் சந்திப்பு முன்பதிவு செய்ய வேண்டிய அவசியமில்லை, ஆனால் பொறுமையாக இருக்கவும் - நெரிசலான நேரங்களில் நீங்கள் காத்திருக்க வேண்டியிருக்கலாம்.

  பரிசோதனை மையம் டிராய் கற்றல் மையம், 1522 E. பிக் பீவர் ரோடுமுகவரிக்கு மேல்புறத்தில் அமைந்துள்ளது.

- கட்டடத்தின் மேற்குப் பகுதியில் ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் வாகனத்தை நிறுத்தவும். ஆரஞ்சு நிறக் கூம்புகளையும் “பரிசோதனை மையம்” எனக் குறிப்பிடப்பட்ட கதவையும் தேடுங்கள். அந்தக் கதவு வழியாக மட்டுமே நீங்கள் உள்ளே செல்ல வேண்டும். பிரதானக் கதவுகள் வாயிலாக உள்ளே நுழையக் கூடாது.

  <u>பரிசோதனை மையம் 6:45am முதல் 9:30am மணி வரை திறந்திருக்கும்.</u> நீங்கள் எந்த நேரத்தில் வேண்டுமானாலும் வரலாம், ஆனால் காத்திருப்பு நேரத்தை குறைந்தபட்சமாக இருக்குமாறு பராமரிக்க, சாத்தியமிருந்தால்

உயர்நிலைப்பள்ளி மாணவர்கள் 6:45 மற்றும் 7 மணிக்கு இடையில் வருமாறும், 7-8am மணிக்கு இடையில் வருமாறும், தொடக்கப்பள்ளி மாணவர்கள் 8-9am மணிக்கு இடையில் வருமாறும் கேட்டுக்கொள்கிறோம்.

- உங்கள் மாணவருக்கு பரிசோதனை செய்யப்படும்போது, நீங்கள் பரிசோதனை மையத்திலிருந்து சென்றுவிடலாம், ஆனால் கீழே பட்டியலிடப்பட்டுள்ள நேரங்கள் வரை அது உங்கள் மாணவரின் பள்ளிக்கு வருவதற்கு நீங்கள் காத்திருக்க வேண்டும். ஒவ்வொரு முடிவையும் செயல்முறைப்படுத்த பள்ளிகளுக்குத் தெரிவிக்கவும், உங்கள் பிரதான அலுவலகத்தில் வருகைப் பதிவு செயல்முறையை நெறிப்படுத்தவும் இது எங்களுக்கு உதவும். எத்தனை மாணவர்கள் பங்கேற்கிறார்கள் என்பதை நாங்கள் பார்க்கும்போது இந்த நேரங்கள் மாறலாம் - ஏதாவது மாற்றங்கள் இருந்தால் உங்கள் பள்ளி அதைத் தெரிவிக்கும்.

**உயர்நிலைப் பள்ளிகள்:**
ஏதென்ஸ் மற்றும் டிராய் உயர்நிலைப் பள்ளி: **7:35am**
இன்டர்நேஷனல் அகாடமி ஈஸ்ட் **8:00am**
டிராய் கல்லூரி மற்றும் தொழில் உயர்நிலைப் பள்ளி: **8:00am**

**மாற்றத்திற்கான டிராய் மையம்**
TCT: 8:15-8:45am

**நடுநிலைப் பள்ளிகள்:**
பவுலன் பூங்கா மற்றும் லார்சன்:**8:10am**
ஸ்மித் அண்ட் பேக்கர்: **8:35am**

**தொடக்கப் பள்ளிகள்:**
பெமிஸ், ஹில், மார்டெல், டிராய் யூனியன், வாஸ் மற்றும் வாட்டில்ஸ்: **9:00am**
பர்னார்ட், கோஸ்டெல்லோ, ஹாமில்டன், லியோனார்ட் அண்ட் மோர்ஸ் மற்றும் ஸ்க்ரோடர்:**9:40am**

**முன்பருவப் பள்ளி**
டிராய் முன்பருவப் பள்ளி: **9:30am**

முன்பருவப் பள்ளி, தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளி பெற்றோர்கள் பரிசோதனை மைய பாஸ் உடன் தங்கள் மாணவர்களுடன் பள்ளிக்கு வர வேண்டும் (தயவுசெய்து உங்கள் பள்ளியின் நடைமுறைகளைப் பின்பற்றவும், பல பள்ளிகளில் பெற்றோர்கள் முன்கூடத்தில் காத்திருக்க வேண்டும்.) உங்கள் மாணவர் அவர்களுடைய பெயரையும்

அன்றைய தேதி குறிக்கப்பட்ட அனுமதிச்சீட்டையும் காண்பிப்பார். மாணவர் நெகடிவ் முடிவு வைத்திருக்கிறாரா என்பதை பள்ளி ஊழியர் சரிபார்த்துவிட்டு அன்றைய தினம் உங்கள் மாணவரை பள்ளிக்கு வரவேற்பார். TCT/ உயர்நிலைப் பள்ளி பெற்றோர்கள் கட்டடத்திற்குள் வர வேண்டியதில்லை, ஆனால் முடிவுகள் வந்துவிட்டன என்பதையும் காத்திருப்பதற்காக உங்கள் மாணவர் மீண்டும் காருக்கு வர வேண்டியதில்லை என்பதையும் உறுதிசெய்ய வாகனம் நிறுத்துமிடத்தில் அவர்கள் சுமார் ஐந்து நிமிடங்கள் காத்திருக்க வேண்டும்.

**கேள்விகள்?** கெர்ரி பிர்மிங்ஹாம் (kbirmingham@troy.k12.mi.us) அல்லது TSD தாதி ஸ்டீபனி மில்லர் (smiller@troy.k12.mi.us.) ஆகியோருக்கு மின்னஞ்சல் அனுப்பவும்.